**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, மன்னார்குடி**

முன்னிலை: திரு.ஜெ.தமிழ்முருகன்,பி.ஏ.,பி.எல்.,

நீதித்துறை நடுவர் எண்.1, மன்னார்குடி

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் நாள் புதன்கிழமை

**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண்.114/2025**

## CASE SUMMARY

| Sl.No. | Description | Remarks | |
|---|---|---|---|
| 1 | The period of remand of the accused | Remanded on :A1,A2- 06.12.2021<br>A3, A4- Nil (AB)<br>Released on : A1,A2- 14.12.2021<br>A3, A4- 20.12.2021<br>(Surrender) | |
| 2 | The date of filing of complaint/final report in the Court | 15.04.2025 | |
| 3 | The date of committal of the case to the Court of Sessions | Not Applicable | |
| 4 | The date of Questioning of accused U/S 228, 240, 246 and 251 of the Code of Criminal producer 1973 as the case may be | 24.02.2026 | |
| 5 | Filing of all miscellaneous petitions and their result including the results on challenge before superior Court. Except routine petitions like petition under section 317 of the Code . | U/S 320 BNSS Petition filed on 16.03.2026 and Dismissed . | |
| 6 | Date of examination in Chief and Cross examination of a witness | Chief | Cross |
| | | P.W.1 –16.03.2026 | No Cross |
| | | P.W.2 –16.03.2026 | No Cross |
| | | P.W.3 –16.03.2026 | 16.03.2026 |
| 7 | Date of examination of the accused under section 351(1)(b) BNSS of the Court | 17.03.2026 | |



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.18 19:27:29 +0530

| | | |
|---|---|---|
| 8 | Details of Abscondence of an accused and his appearance /production, as the case may be | Not Applicable |
| 9 | Grant of stay by superior Courts and the results thereof | Not Applicable |

**// எதிராக//**

| | | |
|---|---|---|
| **அரசுக்காக:**<br>**காவல் ஆய்வாளர்,**<br>மன்னார்குடி நகர காவல் நிலையம்,<br>குற்ற எண். 1626/2021,<br>ச/பி. 294(பி), 323, 326, 506(2) இதச | | ........குற்ற முறையீட்டாளர் |
| | /எதிர்/ | |
| 1) சண்முகம் (எ) பைபாஸ் பாபு,<br>வயது 41/2022,<br>த/பெ.நடராஜன்,<br>எண்.25/14, மணிகண்டன் நகர்,<br>கோபிரளயம் ரோடு,<br>மன்னார்குடி.<br><br>2) அசோக்குமார் (எ) அசோக்,<br>வயது 33/2022,<br>த/பெ.மோகன்<br>எண்.24-ஏ/17,<br>தெற்கு கோபுர வாசல்,<br>மன்னார்குடி.<br><br>3) ஆனந்த், வயது 24/2022,<br>த/பெ.சேகர், | | .... 1 முதல் 4 எதிரிகள் |



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.18 19:27:33 +0530

| | | |
|---|---|---|
| 9/138, மெயின்ரோடு,<br>இலக்கணாம்பேட்டை,<br>மன்னார்குடி தாலுக்கா.<br><br>4) சேகர், வயது 51/2022,<br>த/பெ. தங்கராசு,<br>9/138,மெயின்ரோடு,<br>இலக்கணாம்பேட்டை,<br>மன்னார்குடி தாலுக்கா. | | |

இவ்வழக்கானது கடந்த 15.04.2025 ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு, இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் கவனமான பரிசீலனையில் இருந்து வந்து, இன்று 17.03.2026 என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்ற முறையீட்டாளர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் D.துர்காதேவி நிலை.2 அவர்களும் எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.எஸ்.நடேஷ் அவர்கள் முன்னிலையாகி, இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்த பின்னர் இன்று (18.03.2026) இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்........

**//தீர்ப்புரை//**

**1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்.**

புகார்தாரரின் வீட்டு அருகில் புகார்தாரர் க/பெ.தங்கமணி என்பவர் கடந்த 05.12.2021ம் தேதி மாலை சுமார் 05.30 மணிக்கு தனது வீட்டு வாசலில் நின்றுக்கொண்டிருந்த போது 1வது எதிரி பைபாஸ்பாபு (எ) சண்முகம், என்பவர் புகார்தாரரிடம் ரமேஷ்க்கு கொடுக்க வேண்டிய பணத்தை சொன்ன நேரத்தில் கொடுக்க முடியாதாடி தேவடியா குச்சிக்காரி மவளே என்று பல பேர் பார்க்கும் படி பொது இடத்தில் அசிங்கமாக திட்டியும் புகார்தாரர் சுமதியை 2 வது எதிரி அசோக், 3 வது எதிரி ஆனந்த் , 4 வது எதிரி சேகர் ஆகியோர்கள் புகார்தாரரை கம்பால் அடித்தும் சொற்ப காயத்தை ஏற்படுத்தியும் 1வது எதிரி பைபாஸ் பாபு பீர் பாட்டிலால் புகார்தாரரை வலது கையில் அடித்தும் கையால் வாயில் குத்தி கொடுங்காயத்தை ஏற்படுத்தி கொலை


JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2026.03.18 19:27:37 +0530

மிரட்டல் விடுத்த எதிரியின் செய்கையானது இதச பிரிவுகள் 294(பி), 326, 323,354, 506(2) ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என மன்னார்குடி நகர காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.நகல் வழங்கல்**

எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரிகளுக்கு 230 BNSS பிரிவின் கீழ் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

**3.குற்றச்சாட்டு வனைதல்**

எதிரிகளிடம் குற்றம் பற்றி வினவ போதிய முகாந்திரம் இருந்ததால் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 326, 323, 506(2) ன் கீழ் 263 BNSS பிரிவின் படி குற்றச்சாட்டு வனைந்து விளக்கிக் கூறி வினவியபோது எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்தார்கள். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையான சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டும், சான்றாவணங்கள் அ.சாஆ.1 முதல் அ.சாஆ.11 வரையும் சான்றுப் பொருள் 1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**4.அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து புலப்படும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்**

**அசா.1 சுமதி** தனது சாட்சியத்தில் தான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், கடந்த 2021ம் வருடம் மாலை 05.30 மணியளவில் தான் வீட்டின் அருகே நின்றுகொண்டிருந்தபோது அங்கு ஒரு சிலருக்கிடையே தகராறு ஏற்பட்டது என்றும், தான் வேடிக்கை பார்க்க சென்றபோது நடந்த தள்ளுமுள்ளுவில் தான் கீழே விழுந்ததில் தனக்கு கையில் இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், அதற்காக மன்னார்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றும், ஆஜர் எதிரிகளுக்கும் தங்களுக்கும் முன்விரோதம் இருந்ததால் சம்பவ இடத்தில் அவர்கள் நின்றுகொண்டிருந்தததால் அவர்கள் தான் தன்னை தாக்கியிருப்பார்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டேன் என்றும், நீதிமன்றத்தில் தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் தான் கொடுத்ததுதான் என்றும்,அதிலுள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், புகார் வாக்குமூலத்தில் உள்ளகையொப்பம் மட்டும் அசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், போலீசார் தன்னை விசாரித்தார்கள்



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.18 19:27:41 +0530

என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**அசா.2 தங்கமணி** தனது சாட்சியத்தில் தான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன் என்றும், அசா.1 தனது மனைவி என்றும், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், கடந்த 2021ம் வருடம் மாலை 05.30 மணியளவில் தனது மனைவி வீட்டின் அருகே நின்று கொண்டிருந்தபோது அங்கு ஒரு சிலருக்கிடையே தகராறு ஏற்பட்து என்றும், எனது மனைவி வேடிக்கை பார்க்க சென்றபோது நடந்த தள்ளுமுள்ளுவில் அவர் கீழே விழுந்ததில் அவரது கையில் இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், அதற்காக மன்னார்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றும், சம்பவ தினத்தன்று வேலை விசயமாக வெளியூர் சென்றிருந்தேன் என்றும், ஆஜர் எதிரிகளுக்கும், தங்களுக்கும் முன்விரோதம் இருந்ததால் சம்பவ இடத்தில் அவர்கள் நின்றுகொண்டிருந்ததால் அவர்கள் தான் தாக்கியிருப்பார்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டார் என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**அசா.3** பாலச்சந்தர் காவல் உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில் தான் தற்போது மன்னார்குடி நகர காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன் என்றும், இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் ஆறுமுகம் மற்றும் உதவி ஆயவாளர் முருகன் ஆகியோர்களின் கையொப்பம் உடன் பணியாற்றிய வகையில் நன்கு தெரியும் என்பதாலும் கால தாமத்தினை தவிர்க்கும்பொருட்டு நீதியின் நலன் கருதி இவ்வழக்கின் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், கடந்த 06.12.2022ம் தேதியன்று 11.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் ஆறுமுகம் நிலைய பொறுப்பில் இருந்தபோது மன்னார்குடி அரசு தலைமை மருத்துவமனையில் இருந்த தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த லக்கணாம்பேட்டை தங்கமணி மனைவி சுமதி என்பவரிடம் இருந்து புகார் வாக்குமூலம் பெற்று வந்தார் என்றும், மேற்படி புகார் வாக்குமூலம் அசா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் நிலைய குற்ற எண். 1626-2021ல் 294(பி), 324, 323, 506(2) இதச ன் கீழ் எதிரியின் மீது வழக்கு பதிவு செய்துள்ளார் என்றும், அவர் பதிவு

செய்த முதல் தகவல் அறிக்கையின் அச்சு படிவம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், வழக்கு கோப்பை மேல் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்தார் என்றும், வழக்கை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உதவி ஆய்வாளர் அன்றைய தினமே பிற்பகல் 12.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கபிலன் மற்றும் ஆனந்தராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும், பார்வை மகசர் மற்றும் வரைபடம் அ.சா.ஆ.5 மற்றும் 6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், பின்னர் 12.30 மணிக்கு சம்பவ இடமான தங்கமணி என்பவரின் வீட்டு எதிரே உள்ள ஆற்று வாய்கால் ஓரத்தில் மேற்படி அதே சாட்சிகள் முன்னிலையில் உடைந்த பீர் பாட்டிலை முன் பகுதி சிறிதளவை கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றியுள்ளார் என்றும், மேற்படி கைப்பற்றுதல் மகசர் அசா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார் என்றும், சம்பவம் உண்மை என தெரியவந்ததும் எதிரிகளை தேடிய போது அன்றையதினம் 15.30 மணிக்கு எதிரிகள் அசோக்குமார் மற்றும் சண்முகம் ஆகியோர்களை மதுக்கூர் பைபாஸ் ரோடு அருகே காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற அடைப்புக்காவலுக்கு உட்படுத்தியுள்ளார். வழக்கில் கைப்பற்றப்பட்ட தடயப்பொருளை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார் என்றும், மேற்படி படிவம் 91 அசா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், சிபி எண்.100/2025. நீதிமன்றத்தில் காட்டப்படும் தடயப்பொருள் தான் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டதாகும் என்றும், அது அசா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், எதிரிகள் மற்ற இருவரும் மாண்பமை உயர்நீதிமன்றத்தில் முன் பிணையம் பெற்று சென்ற விபரம் தெரிந்து கொண்டார் என்றும், இச்சம்பவத்தில் காயம் அடைந்த வாதி சுமதி என்பவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர்கள் அரவிந்த் ஆதித்யா மற்றும் மருத்துவர் குமரசெந்தில் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று பெற்று தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று அசா.ஆ. 9 மற்றும் 10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், இச்சம்பவத்தில் வாதிக்கு ஏற்பட்ட காயமானது கொடுங்காயம் என்று மருத்துவர் சான்று வழங்கியுள்ளதால்



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.18 19:27:53 +0530

இவ்வழக்கின் சட்டப்பிரிவை 294(பி), 324, 323, 506(2) இதச ல் இருந்து 294(பி), 323, 326, 506(2) இதச ன் கீழ் வழக்கு பதிவு செய்யதுள்ளார் என்றும், மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், இத்துடன் அவரது விசாரணையை முடித்து 1 வது எதிரியின் செய்கையானது இதச 294(பி), 326, 506(2) ன் படியும் 2, 3, 4 எதிரிகளின் செய்கையானது 294(பி), 323, ன் கீழும் தண்டிக்கத்தக்க குற்றம் என குற்ற இறுதியறிக்கை 21.02.2022 ம் தேதி தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**5. எதிரிகளிடம் பிரிவு 351(1)(b) BNSS ன் கீழ் வினவுதல்**

மேற்படி அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து இவ்வழக்கின் எதிரிகளுக்கு பாதகமாக தோன்றியவற்றை தொகுத்து பிரிவு 351(1)(b) BNSS ன் கீழ் வினவியபோது எதிரிகள் பொய் சாட்சியம் என்றும் பொய் வழக்கு என்றும் கூறி மறுத்தார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சியாக யாரையும் விசாரிக்கவோ, ஆவணங்கள் எதுவும் குறியிடப்படவோ இல்லை.

**6. தீர்மானிக்கப்படவேண்டிய விஷயம்**

இவ்வழக்கின் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? அல்லது இல்லையா? என்பதே தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை ஆகும்.

**7.** அரசுத்தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் நிரூபிக்கப்பட்டுள்ளது என வாதிட்டார்.

**8.** எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் எதிரிகள் மீது புகார்தாரரால் பொய்யான புகார் கொடுக்கப்பட்டு வழக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது என வாதிட்டார்.

**9. தீர்வு :**

இவ்வழக்கின் எதிரிகள் மீது 294(பி), 326, 323, 506(2) இதச - ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. மேலும், அரசுத்தரப்பில் அசா.1 முதல் 3 வரையான சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டும், பட்டியல் சாட்சிகள் 3,4,5,67,8 ஆகிய சாட்சிகள் அரசுத்தரப்பில் விசாரணை செய்யப்படாமல் நீக்கம் செய்யப்பட்டுள்ளது. பட்டியல் சாட்சி 9 புலன் விசாரணை அதிகாரியான காவல் உதவி ஆய்வாளர் திரு. முருகன் என்பவர் அரசுத்



JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.18 19:27:57 +0530

தரப்பில் விசாரணை செய்யப்படாமல் நீக்கம் செய்யப்பட்டு அவருக்கு பதிலாக திரு. பாலச்சந்தர் காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் அசா.3 ஆக விசாரணை செய்யப்பட்டு அசாஆ.3 முதல் அசாஆ.11 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

10. இவ்வழக்கில் அசா.1 புகார்தாரராகவும் ஆகவும், அ.சா-2 கண்ணுற்ற சாட்சியாகவும், அ.சா.3 புலன் விசாரணை அதிகாரியாகவும் விசாரிக்கப்பட்டுள்ளார் .

**11. முதலாவது குற்றச்சாட்டிற்கு தீர்வு ( 1 முதல் 4 எதிரிகளுக்கு எதிராக)**

11.1) எதிரிகள் மீதான 1 வது குற்றச்சாட்டான இதச பிரிவு 294(பி)ஐ ஆய்வு செய்யும் போது, புகார்தாரரின் வீட்டு அருகில் புாகர்தாரர் க/பெ.தங்கமணி என்பவர் கடந்த 05.12.2021 ம் தேதி மாலை சுமார் 05.30 மணிக்கு தனது வீட்டு வாசலில் நின்றுக்கொண்டிருந்த போது 1வது எதிரி பைபாஸ்பாபு (எ) சண்முகம், என்பவர் புகார்தாரரிடம் ரமேஷ்க்கு கொடுக்க வேண்டிய பணத்தை சொன்ன நேரத்தில் கொடுக்க முடியாதடி தேவடியா குச்சிக்காரி மவளே என்று பல பேர் பார்க்கும் படி பொது இடத்தில் அசிங்கமாக திட்டியதாக 1 முதல் 4 எதிரிகள் மீது இதச பிரிவு 294(பி) ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. இதச பிரிவு 294(பி ன் படி ஆபாசமான வார்த்தையானது

> “ஆபாசமான வார்த்தையானது ஒரு பொதுவான இடத்தில் பேசப்பட்டிருக்கவேண்டும். எதிரியால் பேசப்பட்ட வார்த்தையால் வாதிக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு பேசியதால் ஏற்பட்ட பாதிப்பை வாதி தன்னுடைய முதல் விசாரணையில் சாட்சியமளித்திருக்கவேண்டும். மேற்படி குற்றச்சாட்டினை அரசுத்தரப்பு சாட்சியங்களோடு பரிசீலிக்கும்போது...

11.2) வழக்கின் அ.சா. 1 தனது முதல் விசாரணையில்....." கடந்த 2021 ம் வருடம் மாலை 05.30 மணியளவில் தான் வீட்டின் அருகே நின்றுகொண்டிருந்தபோது அங்கு ஒரு சிலருக்கிடையே தகராறு ஏற்பட்டது என்றும், தான் வேடிக்கை பார்க்க சென்றபோது நடந்த தள்ளுமுள்ளுவில் தான் கீழே விழுந்ததில் தனக்கு கையில் இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், அதற்காக மன்னார்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றும், ஆஜர் எதிரிகளுக்கும் தங்களுக்கும்



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.18 19:28:02 +0530

முன்விரோதம் இருந்ததால் சம்பவ இடத்தில் அவர்கள் நின்றுகொண்டிருந்தததால் அவர்கள் தான் தன்னை தாக்கியிருப்பார்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டேன் என்று சாட்சியமளித்துள்ளார். அசா.2-ம் அசா.1-ஐ அனுசரித்து சாட்சியமளித்துள்ளார். அசா.1 மற்றும் அசா.2 ஆகியோர்கள் 1 முதல்4 எதிரிகள் அசிங்கமாக திட்டியதாகவோ, அதனால் தனக்கு பாதிப்பு ஏற்பட்டதாகவோ சாட்சியமளிக்கவில்லை என்பதால் இதச பிரிவு 294(பி)ன் கீழான குற்றச்சாட்டானது போதிய ஆதாரத்துடன் அரசுத்தரப்பால் மெய்ப்பிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**12. இரண்டாவது குற்றச்சாட்டிற்குத் தீர்வு ( 2 முதல் 4 எதிரிகளுக்கு எதிராக)**

12.1) மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக 2 முதல் 4 எதிரிகள் புகார்தாரரை கம்பால் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியதாக 2 முதல் 4 எதிரிகள் மீது இதச பிரிவு 323 ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

12.2) அசா.1 சுமதி தனது முதல் விசாரணையில்....." கடந்த 2021ம் வருடம் மாலை 05.30 மணியளவில் தான் வீட்டின் அருகே நின்றுகொண்டிருந்தபோது அங்கு ஒரு சிலருக்கிடையே தகராறு ஏற்பட்டது என்றும், தான் வேடிக்கை பார்க்க சென்றபோது நடந்த தள்ளுமுள்ளுவில் தான் கீழே விழுந்ததில் தனக்கு கையில் இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், அதற்காக மன்னார்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றும், ஆஜர் எதிரிகளுக்கும் தங்களுக்கும் முன்விரோதம் இருந்ததால் சம்பவ இடத்தில் அவர்கள் நின்றுகொண்டிருந்தததால் அவர்கள் தான் தன்னை தாக்கியிருப்பார்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

12.3) சம்பவத்தினை கண்ணுற்ற சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ள அசா.2 தங்கமணி தனது சாட்சியத்தில் "தான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன் என்றும், அசா.1 தனது மனைவி என்றும், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், கடந்த 2021ம் வருடம் மாலை 05.30 மணியளவில் தனது மனைவி வீட்டின் அருகே நின்று கொண்டிருந்தபோது அங்கு ஒரு சிலருக்கிடையே தகராறு ஏற்பட்து என்றும், எனது மனைவி வேடிக்கை பார்க்க சென்றபோது நடந்த தள்ளுமுள்ளுவில் அவர் கீழே விழுந்ததில் அவரது கையில் இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், அதற்காக



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2026.03.18 19:28:07 +0530

மன்னார்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றும், சம்பவ தினத்தன்று வேலை விசயமாக வெளியூர் சென்றிருந்தேன் என்று சாட்சியமளித்துள்ளார்.

12.4)அசா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள விபத்து பதிவேட்டில் 5 நபர்கள் தாக்கியதாக சொல்லப்படும் நிலையில் 4 நபர்கள் மீது மட்டும் வழக்கு செய்ததற்கான காரணம் குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

12.5) அசா.1 மற்றும் அசா.2 ஆகிய சாட்சியங்களிலிருந்து எதிரிகள் அசா.1 ஐ கம்பால் தாக்கியாகவும், அதில் அசா.1-க்கு ஏற்பட்டது என்றும் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. எனவே 2 முதல் 4 எதிரிகளுக்கு எதிராக இதச பிரிவு 323-ன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**13. மூன்றாவது குற்றச்சாட்டிற்குத் தீர்வு (1 வது எதிரிக்கு எதிராக)**

13.1) மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக 1 வது எதிரி பீர் பாட்டிலால் புகார்தாரரின் வலது கையில் அடித்தும், கையால் வாயில் குத்தி கொடுங்காயத்தை ஏற்படுத்திய எதிரி மீது இதச பிரிவு 326 ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

13.2) அசா.1 சுமதி தனது முதல் விசாரணையில்....." கடந்த 2021 ம் வருடம் மாலை 05.30 மணியளவில் தான் வீட்டின் அருகே நின்றுகொண்டிருந்தபோது அங்கு ஒரு சிலருக்கிடையே தகராறு ஏற்பட்டது என்றும், தான் வேடிக்கை பார்க்க சென்றபோது நடந்த தள்ளுமுள்ளுவில் தான் கீழே விழுந்ததில் தனக்கு கையில் இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், அதற்காக மன்னார்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றும், ஆஜர் எதிரிகளுக்கும் தங்களுக்கும் முன்விரோதம் இருந்ததால் சம்பவ இடத்தில் அவர்கள் நின்றுகொண்டிருந்ததால் அவர்கள் தான் தன்னை தாக்கியிருப்பார்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

13.3) சம்பவத்தினை கண்ணுற்ற சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ள அசா.2 தங்கமணி தனது சாட்சியத்தில் "தான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன் என்றும், அசா.1 தனது மனைவி என்றும், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், கடந்த 2021 ம் வருடம் மாலை 05.30 மணியளவில் தனது மனைவி வீட்டின் அருகே



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2026.03.18 19:28:11 +0530

நின்று கொண்டிருந்தபோது அங்கு ஒரு சிலருக்கிடையே தகராறு ஏற்பட்டது என்றும், எனது மனைவி வேடிக்கை பார்க்க சென்றபோது நடந்த தள்ளுமுள்ளுவில் அவர் கீழே விழுந்ததில் அவரது கையில் இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், அதற்காக மன்னார்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றும், சம்பவ தினத்தன்று வேலை விசயமாக வெளியூர் சென்றிருந்தேன் என்று சாட்சியமளித்துள்ளார்.

13.4) அசா.1 மற்றும் அசா.2 ஆகிய சாட்சியங்களிலிருந்து 1ம் எதிரி அசா.1 ஐ வலது கையில் பீர் பாட்டிலால் அடித்தும், கையால் வாயில் குத்தியும் கொடுங்காயத்தை ஏற்படுத்தியதாக குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. எனவே 1வது எதிரிக்கு எதிராக இதச பிரிவு 326-ன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**<u>14. நான்காவது குற்றச்சாட்டிற்குத் தீர்வு (1வது எதிரிக்கு எதிராக)</u>**

14.1) இந்நீதிமன்றத்தால் 1வது எதிரி மீது சுமத்தப்பட்ட நான்காவது குற்றச்சாட்டான இதச பிரிவு 506(2) ஐ ஆய்வு செய்யும்போது, 1வது எதிரி கொலை மிரட்டல் விடுத்த செயலானது எதிரி மீது இதச பிரிவு 506(2)ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

14.2 ) மேற்படி குற்றச்சாட்டினை அரசு தரப்பு சாட்சியங்களோடு பரிசீலிக்கும்போது அசா.1 அவரது முதல் நீதிமன்ற விசாரணையில் மேற்படி எதிரி மீது இதச பிரிவு 506(2) ஈர்க்கும் வகையில் எதிரி தன்னை பீர் பாட்டிலைக் காட்டி கொலை செய்து விடுவதாக மிரட்டல் விடுத்ததால் தனக்கு எதிரி சொன்னதுபோல் தன்னை கொன்று விடுவார் என்ற உயிர் பயமோ, பீதியோ ஏற்பட்டதாக அசா.1 நீதிமன்றத்தில் சாட்சியம் எதுவும் முன் வைக்காத நிலையிலும், அதேபோல் சம்பவத்தினை கண்ணுற்ற சாட்சியான அசா.2 சாட்சியம் அளிக்காத நிலையிலும் எதிரிக்கு எதிராக வனையப்பட்ட பிரிவு 506(2) இதச-வின் கீழான குற்ச்சாட்டானது அரசு தரப்பால் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நிதிமன்றம் கருதுகின்றது.

15. எனவே, மேலே விசாரிக்கப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து எதிரிகளுக்கு எதிராக இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட இவ்வழக்கின் 1வது எதிரிக்கு எதிராக 294(பி), 326, 506(2)-ன் கீழான குற்றச்சாட்டுகளும், 2 முதல் 4 எதிரிகளுக்கு மீதான இதச பிரிவுகள் 294(பி), 323-ன்



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.18 19:28:16 +0530

கீழான குற்றச்சாட்டுகள் எல்லாவித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு அரசு தரப்பால் மெய்ப்பிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

16) இறுதியாக , இவ்வழக்கின் 1 வது எதிரி மீதான இதச பிரிவுகள் 294(பி), 326, 506(2) ன் கீழ் குற்றவாளி அல்ல என்றும், 2 முதல் 4 எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 294(பி), 323-ன் கீழ் குற்றவாளிகள் அல்ல என்றும் இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டு, பிரிவு 271(1) BNSS ன் கீழ் எதிரிகளை இந்நீதிமன்றம் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கின்றது.

17) இவ்வழக்கில் தடயப்பொருளாக தாக்கல் செய்யப்பட்டுள்ள சி.பி.எண்.100/2025 உள்ள GLASS ARTICLES-உடைந்த பீர் பாட்டிலின் முன் பகுதி சிறிதளவு. மேற்படி தடயப்பொருள் அபாயகராமானது என்பதால் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

18) எதிரிகள் எழுதிக்கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டுக் காலத்திற்கு பிறகு தானாக ரத்தாக வேண்டியது.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் நாள் என்னால் திறந்த இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.18 19:28:20 +0530

நீதித்துறை நடுவர் எண். 1,

மன்னார்குடி.

**1.அரசு தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| அசா.1 | சுமதி |
| அசா.2 | தங்கமணி |
| அசா.3 | பாலசந்தர் காவல் உதவி ஆய்வாளர் |

**2. அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| அசா.1 | 06.12.2021 | புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் |
| அசா.2 | 16.03.2026 | சமரச மனுவில் உள்ள அசா.1ன் கையொப்பம் |
| அசா.3 | 06.12.2021 | புகார் வாக்குமூலம் |
| அசா 4. | 06.12.2021 | முதல் தகவல் அறிக்கையின் அச்சுப்படிவம் |
| அசா.5 | 06.12.2021 | பார்வை மகசர் |
| அசா.6 | 06.12.2021 | வரைபடம் |
| அசா.7 | 06.12.2021 | கைப்பற்றுதல் மகசர் |
| அசா.8 | -- | படிவம் 91 |
| அசா.9 | 05.12.2021 | விபத்து பதிவேடு |
| அசா.10 | -- | காயச்சான்று |
| அசா.11 | 06.12.2021 | சட்டப்பிரிவு மாற்று அறிக்கை |

3. **அரசு தரப்பு சான்று பொருள் 1):** சி.பி.எண்.100/2025 உள்ள GLASS ARTICLES-உடைந்த பீர் பாட்டிலின் முன் பகுதி சிறிதளவு.

4. எதிரிகள் தரப்பு சாட்சிகள் , மற்றும் சான்று பொருட்கள் : இல்லை

5 எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள் : இல்லை

JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.18 19:28:24 +0530

**நீதித்துறை நடுவர் எண். 1,**

**மன்னார்குடி.**

**குறிப்பு**

1) வழக்கு விசாரணையின்போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.

2) எந்த சாட்சிகளும் மூன்று முறைக்கு மேல் அழைக்கப்படவில்லை.

3)வழக்கின் முடிவு எதிரிகளுக்கும் காவல்துறையினருக்கும் தெரிவிக்கப்பட்டது.

**நகல் பணிந்து சமர்பிக்கப்படுகிறது**

மாண்புமிகு குற்றவியல் தலைமை நீதித்துறை நடுவர் அவர்கள்,

திருவாரூர்.